[5th August 1966

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், அரசாங்கம் ஏக்கருக்கு 8 மூட்டை கட்டாயக் கொள்முதலில் வாங்குகிறது. இந்த ஆண்டு வைகைப் பாசனப் பகுதி பஞ்சமாகப் போய்விட்டது. இராமநாதபுரம் ஜில்லா பற்றி அமைச்சருக்குத் தெரியும். ஒரு வருஷம் விளைந்ததை மூன்று வருஷங்களுக்கு வைத்துக் கொள்ளுவார்கள். கொள்முதல் உத்தரவு வந்தவுடன் கலெக்டரும், தாசில்தாரும் டைரக்ட் செய்து கட்டாயப்படுத்தி வசூல் செய்கிறார்கள். அதனால் பஞ்சம் ஏற்படு கிறது. . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் கேள்வி போடுகிறாரா? அல்லது பிரசங்கம் செய்கிறாரா? பிரசங்கம் செய்துவிட்டு ஒரு கேள்வி போடுவதா? இராமநாதபுரம் ஜில்லாவில் பஞ்சமாக இருப்பதால் அங்கு கொள்முதல் இன்றி விட்டு விடுவார்களா என்று

(பதில் இல்லை.)

*120 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடார்க்காடு மாவட்ட கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிங் சொசைட்டியிலிருந்து 1964 ஜுலையிலிருந்து 1965 மார்ச்சு 31-ம் தேதி வரையில் சர்க்கார் கொள்முதல் செய்த அரிசி எவ்வளவு டன்கள்?

(இ) இக் கொள்முதல் மூலம் அரசாங்கத்துக்கோ அல்லது கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிங் சொசைட்டிக்கோ நஷ்டம் ஏற்பட்டது உண்மையா?

(உ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) 1964 ஜுலை முதல் 1965 மார்ச் 31 வரை வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு சப்ளை—விற்பனைச் சங்கத்திடமிருந்து அரசாங்கம் 169.2 டன் அரிசி கொள் முதல் செய்தது.

(இ) ஆம்.

(உ) வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு சப்ளை—விற்பனைச் சங்கத்திற்கு இதனால் ரூ. 4,780 நஷ்டம் ஏற்பட்டது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த நஷ்டம் எதனால் ஏற்பட்டது என்று அந்த அதிகாரிகளை அரசாங்கம் கேட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : விசாரித்ததில் அந்த வருஷம் அதிகமாகக் குறுவை நெல், அரிசி வாங்க வேண்டிய நிலை இருந்தது, மொத்த டிரான்ஸாக்ஷனில் இந்த நஷ்டம் ஏற்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள்.